www.bdu.ac.in

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி-620024

BHARATHIDASAN UNIVERSITY

**Dr. G. Gopinath**
Registrar

நாள் : 09.01.2019

பெறுநர்

துறைத்தலைவர்கள்/ அலகு அலுவலர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இணைவு பெற்று கல்லூரி முதல்வர்கள்

## பாரதிதாசன் இலக்கிய ஆய்வு வட்டம்

மாண்பமை துணைவேந்தர் அவர்களைப் புரவலராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பாவேந்தர் பாரதிதாசன் இலக்கிய ஆய்வு வட்டம் பாரதிதாசன் பிறந்ததின விழாவைக் கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் போட்டிகளை நடத்தி வருகிறது. இவ்வாண்டும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அலுவலர்களுக்கும் இலக்கிய ஆய்வு வட்டத்தின் சார்பாக நடத்தப் பெறும் கவிதை, கட்டுரைப் போட்டிகள் குறித்த அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மாணாக்கர்களுக்கு இதனைத் தெரியப்படுத்திப் போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. போட்டிக்குரிய கவிதைகளும், கட்டுரைகளும் **பாரதிதாசன் உயராய்வு மையத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 11.03.2019.**

பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை **13.03.2019 புதன்கிழமை அன்று பாரதிதாசன் உயராய்வு மையக் கருத்தரங்க அறையில் முற்பகல் 10.30 மணியளவில்** நடக்கவுள்ளன. இப்போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் முதல், இரண்டாம் பரிசுகள் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் வழங்கப்படும்.

பாட்டுப்போட்டிக்கான பாடல்கள் பாரதிதாசனின் கவிதைகளாகவோ, பாரதிதாசனின் திரைப்படப் பாடல்களாகவோ மட்டுமே அமையப் பெறல் வேண்டும். பேச்சுப் போட்டிக்கான தலைப்புப் போட்டித் தொடங்குவதற்குப் முப்பது நிமிடங்களுக்கு முன் வழங்கப்படும். மேலும், தொடர்புள்ள தகவல்களை அறிய **இயக்குநர்(பொ.), பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி 620 024** என்ற முகவரியை **அணுகவும். கைபேசி எண். 9940933534, 9445293534**

பதிவாளர்

Tiruchirappalli - 620 024, Tamil Nadu, India
☎ 0431 2407092 | +91 431 2407099-P | E-mail : reg@bdu.ac.in

Scanned by CamScanner

# பாரதிதாசன் உயராய்வு மையம்
## பாரதிதாசன் பல்கலைக்கழகம்
### திருச்சிராப்பள்ளி - 620 024

முனைவர் அ.கோவிந்தராஜன்
இயக்குநர் (பொ.)

தொலைபேசி 0431 2407075
செல்பேசி 9940933534
விரிவு எண் 616


---

## பாரதிதாசன் இலக்கிய ஆய்வு வட்டம்

## கவிதைப்போட்டி

- மாணாக்கர்களுக்குரிய தலைப்பு

01. புதுவாழ்வு வேண்டும்
(அல்லது)
02. பிறக்க முடியாது

- அலுவலர்களுக்குரிய தலைப்பு (பல்கலைக்கழக அலுவலர்களுக்கு மட்டும்)

01. மின்விளக்கு நின்றது
(அல்லது)
02. விடுதலை பெறுவது முதல் வேலை

மரபுக் கவிதைகளையோ, புதுக் கவிதைகளையோ எழுதலாம். 32 வரிகளுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

## கட்டுரைப்போட்டி

- மாணாக்கர்களுக்குரிய தலைப்பு

01. தமிழன் மாணவர் ஆவல்
(அல்லது)
02. ஆதித்தமிழர்

- அலுவலர்களுக்குரிய தலைப்பு (பல்கலைக்கழக அலுவலர்களுக்கு மட்டும்)

01. நல்லதைச் சொல்கிறோம்
(அல்லது)
02. தமிழர் ஒற்றுமை

A-4 அளவில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

போட்டிக்குரிய கவிதைகளும், கட்டுரைகளும் பாரதிதாசன் உயராய்வு மையத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் 11.03.2019.

பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை 13.03.2019 புதன்கிழமை அன்று பாரதிதாசன் உயராய்வு மையக் கருத்தரங்க அறையில் முற்பகல் 10.30 மணியளவில் நடத்த உள்ளது.

Scanned by CamScanner